Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

5 மதிப்பெண் வினாக்கள்

1. பொருட்களை உற்பத்தி செய்தல்/திரட்டுதல்: மனித தேவையை பூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.
விற்பனை அல்லது பரிமாற்றம்: தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும். தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காக துணி நெய்தல் அது தொழில் செயல்பாடு ஆகாது.
பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது :
பொருட்கள் உற்பத்தி செய்தல்/திரட்டுதல் என்பது நுகர்வு பொருட்களை துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும் உற்பத்தி பொருட்களான இயந்திரம் சார்ந்ததாகும். சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீட்டு தொடர்புடையதாகும்.
ஒழுங்கு முறையில் தொடர்புடையது: தனிப்பட்ட முறையில் வாங்கி விற்பது என்பது தொழில் ஆகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.
இலாப நோக்கம் : தொழிலின் மிக முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுவது ஆகும். மனித இனம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொண்டு தன்னுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம்.
இடர்பாட்டிற்கான கூறு: தொழில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும். ஒரு வகையில் தன்னுடைய தொழிலை திறம்பட நிர்வாகம் செய்தாலும் இலாபம் என்பது மற்ற காரணிகளை சார்ந்து உள்ளது. அவையாவன, நுகர்வோர் விருப்பு, வெறுப்பு, மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து சிக்கல் மின்சாரம் பற்றாக்குறை ஆகியன ஆகும். இதன் மூலம் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றது ஆகும்.

2.

தொழில்	சிறப்பு தொழில்	வேலைவாய்ப்பு
1.உருவாக்கும் முறை : தோற்றுவிப்பாளரின் முடிவுகள் பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டது.	சிறப்பு தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல்.	சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பை, நியமன கடிதம் பெறுதல்.
2. பணியின் தன்மை : சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அறிவித்தல்	சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல்	பணியாளர்களுக்கு வழங்கிய செயலை/ வேலையை செய்தல்.
3. தகுதி : குறைந்தபட்ச தகுதி ஏதுமில்லை.	குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதியும்/ பயிற்சியும் பெறுதல்.	குறைந்த பட்ச தகுதி தேவையில்லை.
4. அடிப்படை நோக்கம்: சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து இலாபம் ஈட்டுதல்	சேவை புரிதல்.	முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன் கூலி/ சம்பளம் பெறுதல்.
5. மூலதனம்: நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும்.	இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும்.	மூலதனம் ஏதும் தேவையில்லை.
6. வெகுமதி: இலாபம்	தொழில்முறை கட்டணம்	நிலையான கூலி/ சம்பளம் உண்டு இடர் ஏதுமில்லை.

3. தொழிலின் நோக்கங்கள் பின்வருமாறு:
(i) பொருளாதார நோக்கங்கள் : தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது லாபம் ஈட்டுவதே ஆகும். மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும்.
(ii) சமூக நோக்கங்கள் : சமூக நலனைப் பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை, அரிய வகைகளை சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக்கூடாது.
(iii) நிறுவனம் நோக்கங்கள்: தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் மயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல் நுகர்வோருக்குத் திருப்திப்படுத்துவதில் ஆகியன மூலமாக அமையலாம்.
(iv) மனித நோக்கங்கள்: தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும். மேலும் இயலாதவர்கள், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள், நலம் காக்க உதவ வேண்டும். பணியாளர்கள், பொருளாதார, சமூக உளவியல் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும்.
(v) தேசிய நோக்கங்கள்: தொழில் நிறுவனம், ஒரு நாட்டினுடைய மிக முக்கிய அங்கமாக கருதப்படுவதால் அவை நாட்டின் நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. கடமை வகையில் தன்னுடைய குறிக்கோளை அமைத்துத் தெளிவு வேண்டும். ஒரு நாட்டின் நோக்கம் என்பது மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும். எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

4. 1. தயாரிப்பாளர்களால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது
   2. வியாபாரிகளால் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது
   3. சில்லறை வியாபாரிகளால் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது
   4. மருத்துவர்களால் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனைகள்
   5. பட்டயக் கணக்காளர்களால் வழங்கும் கணக்கியல் சேவைகள்

3 மதிப்பெண் வினாக்கள்

5. மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம்.
6. (அ) தொழில் :
   தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.
   (ஆ) சிறப்புத் தொழில் :
   சிறப்புத் தொழில் என்பது அந்தந்த அதற்கென நிர்ணயம் செய்யப்பட உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் ஆகும்.
7. தொழில் நடவடிக்கைகள் பொருட்களை உற்பத்தி செய்வது அல்லது தயாரிப்பு நிலைகள் வழியே செலுத்துவதுடன் தொடர்புடையது ஆகும். உற்பத்தி தொழில் மூலம் நுகர்வு பொருட்களுக்கு மூலப் பொருட்களை வாங்குவது மூலம் பயன்பாடு உருவாகிறது. இறுதியாக நுகர்வோரை சென்றடைகிறது.
8. அரசாங்கத்தின் மூலமாக அல்லது அரசின் அதிகாரம் பெற்ற முகமை மூலமாக உருவாக்கப்பட்டு சட்டத்தால் நடத்தப்படும் தொழிலமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும்.
   பொதுத்துறை தொழிலமைப்பின் வடிவங்களாவன.
   1. துறைவாரி அமைப்பு (பொதுப் பணித்துறை)
   2. பொதுக் கழகம் (இயற்கை மற்றும் எரிவாயு கழகம்)
   3. அரசு நிறுமம் (மாநில வாணிகக் கழகம்)

2 மதிப்பெண் வினாக்கள்

9. எந்தவொரு பொருளாதாரச் செயல்பாடுகள் அல்லது நடவடிக்கையின் நோக்கம் இலாபம் ஈட்டுவதே ஆகும். இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.
10. தொழில் என்பது "இலாபம் பெறும் நோக்குடன் வழக்கமாக பொருள்களையும் பணிகளையும் விற்பனை செய்யும், பரிமாற்றம் செய்யும் நடவடிக்கையாகும்" என வரையரறுக்கப்படுகிறது".
11. வேலை என்பது கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர் பணியமர்த்துநர் என்றும் அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் மற்றும் வேலையாட்கள் என்று அழைக்கப்படுகிறது.
12. அ. வேலை
    ஆ. சிறப்புத்தொழில்
    இ. தொழில்
13. **சிறப்பு தொழில் :** சிறப்பு தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் ஆகும் . வழக்கறிஞர்கள், பட்டய கணக்காளர்கள் ,மருத்துவர்கள் ,பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்பு தொழில் எனலாம் .சிறப்புத் தொழிலாளர்கள் எனவும் அவர்கள் பெரும் வருவாய் சிறப்புத் தொழில் கட்டணம் (professional fee) எனவும் அழைக்கப்படும்.
14. அரசும், தனிநபர் ஒருங்கிணைந்து உருவாக்கி ஒரு தொழிலமைப்பை கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும். (எ கா) மாருதி சுசூகி

QB 365 Study Material